**சாட்சிய வாக்கு மூலம்**

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 26.12.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 112/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | பிச்சையன் |
| தந்தை பெயர் | : | பெத்தபெருமாள் |
| கிராமம் | : | திருகண்ணமங்கை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 80 |

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு. G. சுப்பையன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜரில்லை.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவன் ஆவேன். பக்கிரிசாமி என்பவரை எனக்கு தெரியும். எதிரியை தெரியும் ஆனால் எதிரியின் பெயரை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை

செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.-4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 26.10.2009 ம் தேதி இரவு 3 மணிக்கு நன்னிலம் காவல் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் எதிரி சுதாகர் என்பவரை அம்மையப்பன் பஞ்சாய்த்து போர்டு அருகே கைது செய்து விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அப்பொழுது நானும், தெற்கு தெரு அ.சா-6 சிவானந்தம் கையெழுத்து போட்டோம் என்றும், எதிரி திருநாவுக்கரசு 03.45 மணிக்கு அவர் தானாக முன்வந்து சம்பவ இடத்தை சொல்லி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், பிச்சையன் என்பவரும் கையெழுத்து போட்டோம் என்றும், பின்னர் எதிரிகள் சுதாகர், திருநாவுக்கரசு ஆகியோர்கள் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி சுதாகர் என்னை அழைத்து சென்று அம்மையப்பன் ஓடம்போக்கி ஆறு புதுபாலம் வடகரை மேற்புறம் உள்ள நாணல் காட்டில் அழைததுக்கொண்டு எதிரிகள் சம்பவ இடத்தில் உபயோகப்படுத்திய நான்கு அருவாளை அடையாளம் காட்டி திருநாவுக்கரசு, தினேஷ், கலைவாணன் என்பவர்கள் உபயோகப்படுத்திய விபரம் சொன்னார். அதை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 04.00 மணிக்கு மகஜர் மூலம் கைப்பற்றினார் என்றும், பிறகு எதிரிகளுடன் ஆயதங்களுடன் குடவாசல் காவல் நிலையம் அழைத்து போனார்கள் என்றும், விசாரித்ததாகவும், மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் இட்டுவிட்டு போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் எதிரியை

காப்பாற்ற தற்பொழுது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.12.26 18:26:49 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.